# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

(சபை வரைவுள்ளது)

(சங்கங்களுக்கான அரச கட்டளைச் சட்டத்தின் படி
பதிவு பெற்ற தமிழ் மொழிப் பண்பாட்டு அமைப்பு)

## ஐம்பத்தெட்டாவது (58)

# ஆண்டுப் பொது அறிக்கை

## 1999-2000

தொடக்கம் - 22.03.1942 பதிவு எண் - எஸ்.73

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## 58 வது ஆண்டு அறிக்கை

*தலைவர் அவர்களே! தமிழ்ச் சங்க உறுப்பினர்களே!*

*1999ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2000 ஆண்டு டிசெம்பர் ஈறாக உள்ள காலப்பகுதியில் எமது கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஆற்றிய பணிகளை 58வது ஆண்டின் பொது அறிக்கையாகச் சமர்ப்பிப்பதில் மகிழ்வடைகின்றோம்.*

### முன்னுரை

*உலகின் தொன்மை மிகு மொழிகளில் ஒன்றான எமது தாய்மொழி, கடந்த ஆறு தசாப்தங்களாக, பண்டைத் தமிழ்ச் சங்கங்களின் வழிநின்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தால் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.*

### கொழும்புத் தமிழ்ச் சங்கத் தொலைநோக்குக் கூற்றுகளும் குறிக்கோள்களும் திட்டங்களும்

#### தொலை நோக்குக் கூற்று

*"தமிழ்மொழியின் செழுமையையும் வளர்ச்சியையும் ஊக்குவித்தல்"*

#### சங்க நோக்கக் கூற்று

*சேவை அர்ப்பணிப்புடையோரின் ஒருமித்த உழைப்பைக் கொண்டு தமிழ்ப் பண்பாட்டின் பன்முகப்பாட்டிற்கு மதிப்பளித்து, அவை ஒவ்வொன்-*

றினதும் வளர்ச்சிக்கும் ஒருங்கு சேர்ப்புக்கும் உதவித் தமிழின் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் தமிழாய்வுக்கும் ஊக்கமளித்து, உலகின் பல்வேறு நாடுகளிலுமுள்ள தமிழ்ப் பண்பாடு நிலையங்களின் தகவல் பரிமாற்ற நிறுவனமாகக் கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கித் தமிழ் மொழியின் செழுமையையும் வளர்ச்சியையும் ஊக்குவித்தல்.

### சங்கக் குறிக்கோள்கள்

1. தமிழாய்வை ஊக்குவித்தல்
2. தமிழ்ப்பண்பாட்டின் பன்முகப்பாட்டிற்கு மதிப்பளித்து அவற்றின் வளர்ச்சிக்கும் ஒருங்கு சேர்ப்புக்கும் உதவுதல்.
3. தமிழின் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் ஊக்கமளித்தல்.
4. உலகின் பல்வேறு நாடுகளிலுமுள்ள தமிழ்ப் பண்பாட்டு நிலையங்களின் தகவல் பரிமாற்ற நிறுவனமாக இயங்குதல்.

### நீண்ட காலத்திட்டங்கள்

தமிழ்மொழி, தமிழர் பண்பாடு, கல்வி, கலை போன்றன சமய, இன வேறுபாடின்றி வளர்ச்சி பெற இதன் பங்களிப்பைப் பூரணமாக நல்கி வருவது சிறப்பாய்ச் சொல்லத்தக்கதாகும்.

மொழி வளர்ச்சியின் தளம் நின்று சமூகத்தின் பல தரப்பட்டோரும் பயனுறு வகையில் பொருந்தும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்து, சிறப்புற நடாத்தி வருவதோடு, பல்வகைப் போட்டிகளையும் நடாத்திப் பரிசில்களும் தந்து ஊக்கமளித்தும் வருகின்றது.

தலைநகரில் மட்டுமல்லாது, நாட்டின் பல பாகங்களிலும் மொழியும் கலையும் வளர்ச்சியுற கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஆற்றிவரும் பணிகளும் அளப்பரியனவாம்.

### கொழும்புத் தமிழ்ச் சங்க உறுப்பினர்களின் தொகை

1. ஆயுள் உறுப்பினர் - 261
2. சாதாரண உறுப்பினர் - 181



### ஆண்டுப் பொதுக்கூட்டம்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் 57வது ஆண்டுப் பொதுக் கூட்டம் 12.12.99 மு. ப. 10.00 மணியளவில் சங்க மண்டபத்தில் கூடியது. தலைவர், கலாசூரி இ. சிவகுருநாதன் அவர்கள் தலைமை வகுத்தார். பொதுச் செயலாளர் திரு சோ. தேவராஜா அவர்கள் 56 ஆம் ஆண்டுப் பொதுக்கூட்ட அறிக்கையைச் சமர்ப்பித்தார். அதைத் தொடர்ந்து ஆண்டுப் பொது அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு சபை அங்கீகாரம் பெற்றது. 31.12.98இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான கணக்கறிக்கையும் பொருளாளர் திரு. தி. கணேசராஜா அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. தொடர்ந்து புதிய ஆட்சிக்குழு தெரிவு செய்யப்பட்டது. (இணைப்பு 1)

### புதிய யாப்புப் பதிவு

5.9.99இல் நடந்த விசேட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட அமைப்பு விதிகளின் திருத்தங்கள் சங்கப் பதிவாளரால் 29.11.2000 அன்று அங்கீகரிக்கப்பட்டது. அன்றிலிருந்து திருத்தப்பட்ட யாப்பு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**இக்காலப் பகுதியில் நடைபெற்ற கூட்ட விபரங்கள் :**

| | | | |
|---|---|---|---|
| அ. | ஆட்சிக்குழுக் கூட்டங்கள் | - | 13 |
| ஆ. | விசேட ஆட்சிக்குழுக் கூட்டங்கள் | - | 11 |

**ஏனைய குழுக்களின் கூட்டங்கள் :-**

| | | | |
|---|---|---|---|
| அ. | கல்விக்குழு | - | 7 |
| ஆ. | கட்டிடக்குழு | - | 17 |
| இ. | நூலகக்குழு | - | 9 |
| ஈ. | உறுப்புரிமைக்குழு | - | 8 |
| உ. | இலக்கியக் குழு | - | 6 |
| ஊ. | நிதிக்குழு | - | 7 |
| எ. | நிலைய அமைப்புக்குழு | - | 3 |
| ஏ. | கல்வி நிதியக்குழு | - | 2 |

சங்கத்தின் பணிகள் அனைத்தும் சிறப்புற நடைபெற, தனித்தனியாயும், இணைந்தும் செயற்பட்ட எமது குழுக்கள் அவ்வப்போது காலத்திற்குக் காலம் கூடி, பொருந்தும் திட்டங்கள் வகுத்துச் செயற்பட்டன. பொதுவாய் ஆட்சிக்குழுவும், சிறப்பாய் மேற்படி தனிக்குழுக்களின் செயலாளர்களும், உறுப்பினர்களும் தந்த ஒத்துழைப்பு, பணிகள் வெற்றி பெற வலுச் சேர்த்தன.

## நடைபெற்ற நிகழ்வுகள் :

### அறிவோர் ஒன்று கூடல்:

வாரத்தின் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் பி. ப. 5.30 மணியளவில் சங்க மண்டபத்தில் அறிவோர் ஒன்று கூடல் என்னும் நிகழ்வு 06.09.98 முதல் நடைபெற்று வருகின்றது.

இந் நிகழ்வில் திருக்குறளின் ஒவ்வோர் அதிகாரமும் ஒவ்வொரு வாரத்திலும் குறள் விரும்பிகளால் ஆராயப்பட்டும் கருத்துப் பரிமாறல் செய்யப்பட்டும் வருகின்றது.

அறிவோர் ஒன்று கூடலின் பவளவிழா 22.03.2000 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்டபீட சிரேட்ட விரிவுரையாளர் திரு. V. T. தமிழ்மாறன் அவர்கள் இவ்விழாவில் பங்கு கொண்டு "திருக்குறளும் மனித உரிமைகளும் ஒரு மீள் பார்வை" என்னும் மகுடத்தில் ஒரு சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்தினார்.

### 100வது சிறப்பு நிகழ்வு :

18.12.2000 அன்று சங்கத்தின் முன்னாள் தலைவர் கலாசூரி இ. சிவகுருநாதன் அவர்களின் தலைமையில் இந்நிகழ்வின் 100வது நிகழ்வு நடைபெற்றது.

கம்பவாரிதி திரு. இ. ஜெயராஜ் அவர்களும், பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்தவரும் சங்கத்தின் ஒம்படையார் சபையின் தலைவியுமான திருமதி. செல்வி திருச்சந்திரன் அவர்களும் "எனது பார்வையில் திருக்குறள்" என்னும் தலைப்பினில் சிறப்புரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வுகளில் சங்க உறுப்பினர்களும், ஆர்வலர்களும் ஆர்வத்துடன் பெரும் எண்ணிக்கையில் பங்கேற்று வருகின்றனர்.

அகில இலங்கை சமாதான நீதவான் திரு. நா. நடராசா அவர்கள் நிகழ்வின் ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட்டு உழைக்கின்றார்.

### நூல்நயம் காண்போம்

ஈழத்து எழுத்தாளர்களின் பல்விதப்பட்ட படைப்பிலக்கியங்களையும் மக்கள் பார்வைக்குக் கொண்டுவரும் நோக்கோடும், வாசிப்புப் பழக்கத்தை மக்களிடையே தூண்டவும், புதிய படைப்பாளிகளின், விமர்சனங்களின் உருவாக்கத்துக்கு ஊக்கமளிக்கவும், வெளியீட்டாளர்களை உற்சாகப்படுத்தி வாசகர்களின் பெருக்கத்தைத் தூண்டுவதன் மூலம் புத்தகப் பண்பாட்டைப் பேணவும் நூல்நயம் காண்போம் என்னும் நிகழ்வை வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணியளவில் சங்க மண்டபத்தில் நாம் நடாத்தி வருகின்றோம்.

ஈழநாட்டின் சிறந்த எழுத்தாளர்களின் கவிதை, சிறுகதை, நாவல், உரைநடை இலக்கியங்கள் போன்றவற்றில் ஒன்றைச் சிறந்த ஆய்வாளர்களைக் கொண்டு ஆய்ந்தறிந்து இந்நிகழ்வுகளில் நயம் காணச் செய்கின்றோம். இதுவரை 30 நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன. (இணைப்பு 2)

இந்நிகழ்வுக்கு மூலகாரணமாக அமைந்தவர் சங்கத்தின் துணைத்தலைவர் திரு. சோ. தேவராஜா அவர்களாகும்.

"அறிவோர் ஒன்று கூடல்" "நூல் நயம் காண்போம்" ஆகிய நிகழ்வுகளைச் சங்கத்தின் கல்விக்குழுச் செயலாளர் திரு. ஆழ்வார்ப்பிள்ளை கந்தசாமி அவர்கள் மிகப் பொறுப்போடு நடாத்தி வருகின்றார்.

### சுகாதாரக் கருத்தரங்குகள்

சுகாதாரக் கருத்தரங்குகள் கல்விக் குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டு சங்கத்தில் நடைபெற்று வருகின்றன.

இந்நிகழ்வின் முதன் நிகழ்வு "மூத்தோர் மத்தியில் சம்பவிக்கும் நோய்களும் தவிர்ப்பு முறைகளும்" என்னும் மகுடத்தில் 04.06.2000 ஞாயிறு அன்று காலை 10.00 மணியளவில் ஆரம்பமானது. ஜயவர்த்தனபுரப் பல்கலைக் கழகச் சிரேட்ட விரிவுரையாளர் டாக்டர். எஸ். இ. சிவயோகன் அவர்களும், கொழும்பு மாநகர சபையைச் சேர்ந்த டாக்டர். எஸ். முரளி அவர்களும் பங்கு கொண்டு சிறப்பித்தனர். இளைப்பாறிய சுகாதார அதிகாரி திரு. கா. வைத்தீஸ்வரன் அவர்கள் நிகழ்வை நெறிப்படுத்தினார்.

09.07.2000 ஞாயிறு அன்று காலை 10.00 மணியளவில் "பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பது எவ்வாறு" என்ற தலைப்பில் சங்கத்தின் துணைத் தலைவர்களில் ஒருவரான திரு. சோ. தேவராஜா அவர்களின் தலைமையில் ரேய்கி நிபுணரும் மனநல ஆலோசகருமான டாக்டர் ஜெகராஜன் அவர்கள் ஒரு கருத்தரங்கை நடாத்தினார்.

### மாதாந்தப் பேருரை

நூலகக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கைத் தமிழர் வாழ்வும் வகிபாகமும் என்ற தலைப்பிலான மாதாந்தப் பேருரையின் முதல் நிகழ்வாக 12.02.2000 சனிக்கிழமை அன்று பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களால் "இலங்கைத் தமிழர் யார்? எவர்?" என்னும் தலைப்பில் ஒரு பேருரை நடாத்தப்பட்டது.

மற்றுமொரு நிகழ்வாகக் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி செ. யோகராஜா அவர்களால் "இலக்கியத்தேட்டம் ஈழத்து நவீன இலக்கியம்" என்னும் தலைப்பில் இரண்டாவது உரை 12.11.2000 அன்று நடாத்தப்பட்டது. இவ்வுரைகள் இரண்டும் நூலுருப் பெற்று வெளிவந்தன.

## மக்கள் நலன்பேணும் நிகழ்வுகள்

### இரத்த அழுத்தப் பரிசோதனை :

04.09.98 இல் இருந்து இரு வாரங்களுக்கு ஒருமுறை வெள்ளிக்கிழமை நாட்களில் முற்பகல் வேளைகளில் இரத்த அழுத்தப் பரிசோதனை இளைப்பாறிய வைத்திய அதிகாரி டாக்டர். என். கந்தையா அவர்களால் இலவசமாக நடாத்தப்பட்டு வருகின்றது. தொடர்ந்து நடந்து வரும் இந்நிகழ்வு மிக்க பயனுள்ளதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### பண்டிதர் வகுப்புக்கள்:

பாலபண்டித, பிரவேச பண்டித வகுப்புக்கள் சங்கத்தால் இலவசமாக நடாத்தப்பட்டு வருகின்றன. இது சங்க நடவடிக்கைகளில் ஒரு முக்கிய அம்சமாகும். ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் பரீட்சை நடாத்தும் ஒழுங்குகளுடன் நடாத்தப்படும் இவ்வகுப்புக்கள், புலவர் த.கனகரத்தினம் அவர்களின் முதன்மையோடு, பண்டிதர் க. உமாமகேஸ்வரன், பண்டிதர் க. சிவகுருநாதன், பண்டிதர் ச. சுப்பிரமணியம் ஆகியோர் வகுப்புக்களை நடாத்தி வருகின்றனர்.

## குழுக்களின் பணிகள்

### கட்டிடக் குழு :

சங்கத்தின் முன்னாட் தலைவர் உயர்திரு பொ. சங்கரப்பிள்ளை அவர்களின் நினைவாக அவர் தம் குடும்பத்தவரின் உதவியோடு கட்டப்படும் சங்கரப்பிள்ளை மண்டபத்தின் முதலாம் மாடி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.



கீழ் மண்டபம் பூரணப்படுத்தப்பட்டுச் சங்க நிகழ்வுகள் நடைபெறுவதுடன், வெளியார் நிகழ்வுகளுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது.

எதிர்பாராத விதமாய் இடிந்து வீழ்ந்த சங்கத்தின் தென்புறப் பெருமதில் மீண்டும் கட்டப்பட்டுள்ளது.

சங்கத்தில் நடைபெறும் வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களினதும், பொது மக்களினதும் நலன் கருதி மாணவ, மாணவியர்களுக்கெனப் புறம்பான மலசலகூடங்கள் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

மொத்தமாய்ச் சகல வசதிகளையும் கொண்ட சங்கக் கட்டிட அமைப்புகளுக்கு மிகப் பொறுப்போடு, சிரமங்களைத் தாங்கிச் செயற்பட்டு வரும் கட்டிடக்குழுச் செயலாளர் திரு. ஜே. திருச்சந்திரன் அவர்களின் பணி நன்றியோடு நோக்கப்படத்தக்கதாகும். அவரோடு கட்டிடக் குழுவைச் சார்ந்த ஏனைய உறுப்பினர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களாகும்.

### புதிய கட்டிடத் திறப்பு விழா :

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் புதிய கட்டிடத் திறப்பு விழா 10.12.00 அன்று காலை 9.00 மணியளவில் நடைபெற்றது.

சங்கத்தின் முன்னாட் தலைவர் உயர் திரு. பொ. சங்கரப்பிள்ளை அவர்களின் நினைவாக அவர்தம் குடும்பத்தினரின் பெருநிதியுடன் கட்டப்பட்ட இக்கட்டிடம் இராமகிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி ஆத்மகணானந்தா அவர்களால்த் திறந்து வைக்கப்பட்டதோடு நினைவுப் படிகமும் திரை நீக்கம் செய்யப்பட்டது.

அத்துடன் சங்க நூலக மாடியில் உயர்திரு. பொ. சங்கரப்பிள்ளை அவர்களின் நிழலுருவப்படமும் சுவாமி அவர்களால் திரை நீக்கம் செய்யப்பட்டுத் திரு. பொ. சங்கரப்பிள்ளை அவர்களின் குடும்பத்தவர் திரு. எஸ். சண்முகராசா அவர்களால் மலர்மாலையும் அணிவிக்கப்பட்டது.

இவ்விழாவின் தலைமையை சங்கத்தலைவர் பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்கள் ஏற்கப் பிரதம அதிதி சுவாமிஜீ அவர்களுடன் சிறப்பு அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் திரு. பீ. பீ. தேவராஜ் அவர்களும், கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. எஸ். தில்லை நடராஜா அவர்களும் பங்கு கொண்டனர்.

இவ்விழாவில் "தமிழ்ப் பேரறிஞர் பொ. சங்கரப்பிள்ளை அவர்களின் சிந்தனைகள்" என்னும் நூல் தமிழவேள் க.இ.க. கந்தசுவாமி அவர்களால் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. திரு. எஸ். யோகநாதன் அவர்கள் வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

இவ்விழாவின் முழுப் பொறுப்பினையும் சங்க ஊழியர்களோடு திரு. மா. சடாட்சரன், திரு. சி. சரவணபவன் ஆகியோரின் உதவியுடன் நிலைய அமைப்புக்குழுச் செயலாளர் திரு. க. இ. க. கந்தசுவமி அவர்களே ஏற்று மிகச் சிறப்பாகச் செய்து முடித்தார்.

**நூலகக் குழு :**

நாட்டில் இன்று இயங்கிவரும் மிகச் சிறந்த நூலகங்களில் ஒன்றான எமது கொழும்புத் தமிழ்ச் சங்க நூல்நிலையம், திரு. க. குமரன் அவர்களைச் செயலாளராகக் கொண்டு சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது.

இவ்வருடம் முன்னாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகர் திரு. சி. முருகவேள் அவர்களின் மேற்பார்வையில் சங்க உதவி நூலகர்களான திருமதி. அ. ஜெயரூீ, செல்வி த. ஜெயமாலா ஆகியோருடன் நூல்கள் வகைப்படுத்தப்பட்டு பட்டியலாக்கம் செய்யப்படுகின்றன.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள "சங்கரப்பிள்ளை மண்டபத்திற்கு இடமாற்றம் செய்யப்படும் எமது நூலகம் புதிய தளபாடங்களுடன் நவீன வசதிகள் பெற்று அமையவுள்ளது. கணனி மயமாக்கும் முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன. இந்நூல்நிலைய அமைப்புக்கும், புதுமுறை ஒழுங்கு நடவடிக்கைகளுக்கும் நூலகச் சேவை அறிஞர்களான அல்ஹாஜ். எஸ். எம். கமால்தீன், திரு. ஆ. சிவநேசச்செல்வன், செல்வி. க. கமலாம்பிகை ஆகியோரின் ஆலோசனைகள் பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

தவிரவும் நூலகக் குழு எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தவென நூலக அனுபவம் பெற்ற அறிஞர்களைக் கொண்டு ஒரு "நூலக ஆலோசனைக் குழுவினை உருவாக்கிச் சிறந்த செயற்திட்டங்களையும் உருவாக்கியுள்ளது. இம் முயற்சிகளில் நூலகக் குழுவின் செயலாளர் திரு. க. குமரன் அவர்களின் இடையறா முயற்சிகள் நினைவு கூரத்தக்கனவாகும்.

**நூலக சேவை :**

எமது கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகம் நாட்டின் மிகச் சிறந்த நூலகமாகும். அரிய பல பழந்தமிழ் நூல்களோடு, புதியனவும் கொண்டு சுமார் 20,000 நூல்களை உள்ளடக்கியதாய் அமைந்துள்ளது.



தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை திறந்து வைக்கப்பட்டு மாணவர்களுக்கும், ஆய்வறிஞர்களுக்கும், பொதுமக்களுக்கும் உன்னத சேவையாற்றிவரும் எமது நூலகத்தின் தற்போதைய உறுப்பினர் தொகை 1667 ஆகும். இக்காலப்பகுதியில் புதிதாய்ச் சேர்த்துக் கொள்ளப்பட்டோரின் தொகை 442 ஆகும். அன்பளிப்பாகக் கிடைக்கப் பெற்ற நூல்களின் எண்ணிக்கை 2028 ஆகும். (விபரம் இணைப்பு 3)

இக்காலப்பகுதியில் 367 புதிய நூல்களும், 1165 பழைய அரிய நூல்களும், 30 க்கு மேற்பட்ட சஞ்சிகைகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. நூல்கள் தூவி (Dewey) முறையில் வகைப்படுத்தப்பட்டு, அதற்கான இலக்கங்கள் இடப்பட்டு, நூல்கள் இலகுவில் அடையாளங் காணப்பட்டுப் பெறத்தக்கதாகப் பட்டியலாக்க அட்டவணைகள் சகல நூல்களுக்கும் நூல் தலையங்க முறையிலும், ஆசிரியர் பெயரிலும், விடய ரீதியிலும் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

**நூலக சேவையும் படிப்பகமும்**

மாணவர்கள் தத்தமது பரீட்சைகளுக்குத் தயார் செய்யும் வகையில் மிக்க உதவியாய் அமைதியாய்ப் படிப்பதற்கு ஏற்ற வகையில் சூழலை எமது நூலகம் தர நூலகக் குழுவினர் திட்டமிட்டுச் செயற்படுகின்றனர்.

**சஞ்சிகைகள் பத்திரிகைப் பிரிவு**

இலங்கையில் வெளிவரும் பெரும்பாலான தினசரி வாராந்தப் பத்திரிகைகளையும், இந்திய, இலங்கைச் சஞ்சிகைகளையும், தின, வார, மாத பிற வெளியீடுகளையும் கொள்வனவு செய்து வாசகர்களுக்கு உதவுவதுடன், நகல் பிரதியெடுக்கும் இயந்திரத்தின் சேவையையும் சங்கம் அனைவருக்கும் தந்துள்ளது.

**இலக்கியக் குழு :**

(அ) 1999ம் ஆண்டில் சங்கத்தால் நடத்தப்பட்ட நாவற்குழியூர் நடராசன் கவிதைப் போட்டியின் முடிவுகள் இவ்வருடமே வெளியிடப்பட்டன. அவற்றிற்கான பரிசில்களாக ரூபா 10,000/-, 7000/-, 5000/- என முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசில்களாக அனுப்பி வைக்கப்பட்டன. இதற்கான பரிசில்த் தொகையில் ரூபா 20,000/- மறைந்த கவிஞர் நாவற்குழியூர் நடராசன் அவர்களின் குடும்பத்தினரால் வழங்கப்பட்டது.

(ஆ) இவ்வாண்டின் குறிப்பிடத்தக்க நிகழ்வாக இலக்கியக்குழு திருக்குறள் மாநாட்டை டிசம்பர் மாதம் 2, 3ம் தேதிகளில் வெகு சிறப்பாக நடாத்தியது.

இம்மாநாட்டின் ஒழுங்குகளைச் சங்கத்தின் இலக்கியக் குழு கல்விக்குழுவின் பூரண ஒத்துழைப்புடன் நடாத்தியது.

மாநாட்டின் சிறப்பம்சமாகக் கொழும்புப் பாடசாலைகளுக்கிடையில் திருக்குறள் சம்பந்தமான போட்டிகள் நடாத்தப்பட்டன. திருக்குறள் மனனம், விவாதம், பேச்சு, ஓவியப்போட்டி போன்ற நிகழ்ச்சிகளை நடாத்திப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இதன் பொறுப்புகள் அனைத்தையும் தனியொருவராக நின்று வெற்றிகரமாகச் செய்து முடித்த பெருமைக்குரியவர் சங்கத்தின் அன்றைய இலக்கியக்குழுச் செயலாளர் செல்வி ஸ்ரீகுமாரி கதிரித்தம்பி அவர்களாகும். மாநாட்டு நிகழ்வுகளில் இன்றைய இலக்கியக் குழுச் செயலாளர் திரு. த. சிவஞானரஞ்சன் அவர்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும்.

மாணவர்களுக்கான பரிசில்கள் விருதுகள் ஆகியவற்றை மிகப் பொருந்தத் தேர்ந்தெடுத்து அவற்றில் உரியவர்களுக்கான பெயர் பதித்து நிகழ்வையும் சிறப்பாக நடாத்த ஆட்சிக்குழு உறுப்பினர் திரு. தி. கணேசராஜா அவர்கள் உதவினார். அவரும் சங்கத்தின் நன்றிக்குரியவர்.

மாநாட்டின் நினைவாக ஒரு மாநாட்டு மலர் வெளியிடப்பட்டது. மலரின் வெளியீட்டுப் பணிகள் அனைத்தையும் சங்கத்தின் துணைத் தலைவர்களில் ஒருவரான செல்வி. சற்சொருபவதி நாதன் அவர்கள் முற்றும் ஏற்றுச் செயற்பட்டார். தமிழ்ச் சங்கத்தின் மிகச் சிறந்தவொரு ஆவணமாக எதிர்-காலத்திற்குத் தந்துதவிய செல்வி சற்சொருபவதி நாதன் பாராட்டுக்குரியவர்.

ஆன்றோர் பலரின் கட்டுரைகளும், கவிதைகளும் ஆசிச் செய்திகளும் இம்மலரில் இடம் பெற்று மிக அழகிய முறையில் யுனிஆட்ஸ் நிறுவனத்தினால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

விழாவின் பிற ஏற்பாடுகளைக் கல்விக்குழுச் செயலாளர் திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் பொறுப்பேற்று மிக நிறைவாகச் செய்து உதவினார்.

அரங்க ஒழுங்குகளும், மாநாட்டு மண்டப அலங்காரங்களையும் திரு. க. க. உதயகுமார் அவர்கள் பொறுப்பேற்றுச் சிறப்பாகச் செய்து விழாவின் வெற்றிக்கு உதவினார்.



**கல்விக்குழு :**

சங்கத்தின் இவ்வாண்டு கல்விக்குழுவின் பங்களிப்புகள் நினைவு கூரத்தக்கனவாகும். முன்னர் குறிப்பிடப்பட்டது போன்ற பல சிறப்பான நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுச் சிறப்பாகச் செயற்படுத்தப்படுகின்றன. கல்விக்குழுவின் செயலாளர் திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் தமது குழுவினருடன் ஆக்கபூர்வமான பல காரியங்களைச் செய்து வருகின்றார்.

**கல்வி நிதியம்**

இக்கல்வி நிதியம் அனாதரவான போதிய வருவாயற்ற கல்வியில் சிறந்து விளங்குகின்ற பிள்ளைகளுக்கு கல்வியைத் தொடர்வதற்கு உதவும் நோக்கத்தோடு நிறுவப்பட்டது.

இதற்காக உபவிதிகள் தயாரிக்கப்பட்டு ஆட்சிக்குழுவின் அங்கீகாரம் பெற்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இவ் உபவிதிகள் ஆண்டுப் பொதுக்கூட்டத்தின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

**உறுப்புரிமைக்குழு**

இக்குழுவின் செயலாளராகச் செயற்பட்டுவரும் திரு. எஸ். பாஸ்கரா அவர்கள் தமது குழுவினரின் உதவியுடன் பல புதிய உறுப்பினர்களின் சேர்க்கைக்கு உதவியுள்ளார்.

அ. மிகப் பழைமை வாய்ந்த கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் உறுப்புரிமைப் படிவம் காலத்துக்கேற்ப உறுப்புரிமைக் குழுவினால் புதுப்பிக்கப்பட்டு ஆட்சிக் குழுவின் அங்கீகாரம் பறப்பட்டு உபயோகப்படுத்தப்படுகின்றது.

ஆ. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினர்களில் விரும்பிய-வர்கள் சங்கத்தின் அங்கத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் அடையாள அட்டை பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட அங்கத்தவர் பட்டியல் இணைப்பு 4)

## நிலைய அமைப்புக் குழு

சங்கத்தின் அசையும் அசையாச் சொத்துக்கள் ஆவணங்களைப் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பு நிலைய அமைப்புக் குழுவின் செயற்பாடாகும்.

இக்குழு பலவருடங்களாக இயக்கமுறாது இருந்து, இவ்வாண்டு தொடக்கம் இயக்கமுற்று வருகின்றது. இதன் செயலாளராகத் தமிழவேள் திரு. க. இ. க. கந்தசுவாமி அவர்கள் செயற்பட்டு வருகின்றார். சங்கத்தின் முன்னைய பரிசில் நிதியங்கள் பற்றிய விபரங்களை இக்குழு தந்துள்ளது.

## நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை

சங்கத்தின் பணிகளில் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் பங்களிப்பு குறிப்பிடத் தக்கதாகும்.

## நிதிக்குழு :

சங்கத்தின் நிதியினைக் கையாள்வதில் ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக நிதிச் செயலாளர் திரு. எஸ். பாலேஸ்வரன் அவர்கள் ஆட்சிக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

இவ்விடயம் சம்பந்தமாக ஆட்சிக்குழு ஆராய்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கத்தோடு நிதிக்குழுவை நியமனம் செய்தது.

இக்குழு நிதி கையாள்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து அதற்கு வேண்டிய புதிய ஆக்கபூர்வமான ஆலோசனைகள் அடங்கிய பணிகளைச் சபைக்குத் தெரிவித்து, இவ்வுபவிதிகள் 21.5.00 ஆட்சிக்குழுக் கூட்டத்தில் அங்கீகாரம் பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் செயற்பாடுகளில் திரு. வே. கந்தசுவாமி, திரு. வீ. ஏ. திருஞானசுந்தரம் அவர்கள், திரு. ரகுபதி பாலஸ்ரீதரன் அவர்கள், திரு. க. நீலகண்டன் அவர்கள் திரு. கே. எஸ். பாலகிருஸ்ணன் அவர்களும் முக்கிய பங்களிப்பைச் செய்துள்ளனர். புதிய கட்டிடத் திறப்பு விழா இவ்வாண்டு நிகழ்வதற்கு இக்குழுவின் தூண்டுதலே காரணம்.

## சிரமதானப்பணிகள்

I. 30.07.2000 அன்று புதிய மலசலகூடம் அமைப்பதற்கான நிலப்பிரதேசத்தை ஏற்கனவே அமைந்திருந்த உபயோகத்திற்குப்



பொருந்தாத மலசல கூடத்தை அகற்றுவதன் மூலம் துப்பரவு செய்ய ஒரு சிரமதான முயற்சி நிலைய அமைப்புக் குழுவின் உதவியோடு மேற்கொள்ளப்பட்டது.

இப்பணியில் திரு. க. சுந்தரமூர்த்தி, திரு. ச. பாலேஸ்வரன், திரு. க. குமரன், திரு. தி. கேசவன், திரு. க. உதயகுமார், திரு. மா. சடாட்சரன், திரு. சி. சரவணபவன், திரு. செ. மனோகரன், திரு. க. வீரசக்திருபன், திரு. க. இ. க. கந்தசுவாமி, திரு. த. ஜெயசீலன், டாக்டர். ஜின்னாஹ் ஷரிபுத்தீன், கே. திருச்சந்திரன், க. சத்திருபன் ஆகியோர் பங்கு பற்றினர்.

II. 08.7.2000 சனிக்கிழமையன்று வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்கள் ஒன்றியத்தைச் சேர்ந்த மாணவர்கள் சங்க நூலகத்தின் நூலகச் செயலாளரின் மேற்பார்வையில் சிரமதானப்பணியொன்றை மேற்கொண்டு நூல்களைத் துப்பரவு செய்து நூலகத்துக்கு உதவி தந்தனர்.

## நூற்பதிப்பு :

தமிழியல் ஆய்வறிஞர்களின் ஆய்வுப் பெறுபேறுகள் தமிழ் பேசும் மக்களிடையே அறியப்பட வேண்டும் என்னும் நோக்கில் சங்க நூலகக் குழவின் செயற்திட்டத்தின் கீழ் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் ஆய்வுக்கட்டுரை "மதமும் கவிதையும்" சங்கத்தால் நூலுருப் பெற்றது. திரு. க. குமரன் அவர்களின் முழு முயற்சியின் அறுவடை இது எனலாம்.

## கலந்துரையாடல்கள் :

04.06.2000 ஆண்டு ஞாயிற்றுக்கிழமை கொழும்பு திருமறைக் கலாமன்றத்தினருக்கும் எமது ஆட்சிக்குழு அங்கத்தவர்களுக்கிடையிலும் இரு அமைப்புகளினதும் இலக்கிய, கலை, கலாசாரப் பணிகள் பற்றிய கலந்துரையாடல் இடம் பெற்றது.

11.06.2000 அன்று நூலக அபிவிருத்தியை மையமாகக் கொண்டு நூலகர்கள், கல்விமான்கள், சங்க உறுப்பினர்கள் ஒரு கலந்துரையாடலை நடாத்தினார். இதன் பேறாக "நூலக ஆலோசனைக் குழு" உருவாக்கப்பட்டது.

வெளிவாரிப் பட்டதாரி மாணவர் ஒன்றியத்துடன் 2.7.2000 அன்று சங்க உறுப்பினர்கள் நடாத்திய கலந்துரையாடலின் பின் நூலகத் திருத்தப் பணிகளில் அவர்களின் உதவியைப் பெற முடிந்தது.

### அறிஞர்கள் வருகை

அ. "ஈழத்துப் பூராடனார்" திரு க. நா. செல்வராசகோபால் அவர்கள் 29.01.2000 அன்று சங்கத்திற்கு வருகை தந்திருந்தார். அன்னாருக்குச் சங்கம் ஒரு வரவேற்பளித்துக் கௌரவம் செய்தது. துணைத்தலைவர் திரு. கு. சோமசுந்தரம் அவர்கள் தலைமை வகித்தார். ஜின்னாஹ் ஷரிபுத்தீன் எழுதிய கவிதை மடல் புலவர் த. கனகரத்தினம் அவர்களால் வாசித்தளிக்கப்பட்டது. இப் பேரறிஞரின் தமிழ்ப் பெரும்பணிகள் பற்றித் தமிழவேள் க. இ. க. கந்தசுவாமி அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்.

ஆ. தமிழ் நாட்டைச் சேர்ந்த ரேய்கி நிபுணரும் மனநல ஆலோசகருமான டாக்டர் ஜெகநாதன் அவர்கள் இருமுறை சங்கத்திற்கு வந்து மருத்துவ ஆலோசனைகளை வழங்கினார்.

### அனுதாப நிகழ்வுகள்

எமது சங்கம் பத்திரிகை ஆசிரியரும் சங்கப் போஷகர்களில் ஒருவருமாயிருந்த திரு. எஸ். டீ. சிவநாயகம் அவர்களுக்கும், எமது துணைத்தலைவர்களில் ஒருவராயிருந்த மாமனிதர் திரு. குமார் பொன்னம்பலம் அவர்களுக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான அல்ஹாஜ் எம். எச். எம். அஷ்ரப் அவர்களுக்கும் தமிழ் மூதறிஞர் இலக்கண வித்தகர் நமசிவாயம் தேசிகர் அவர்களுக்கும், புலவர்மணி ஷரிபுத்தீன் அவர்களுக்கும் அவரவர்களின் மறைவையொட்டி மௌனாஞ்சலி செலுத்தியதோடு அனுதாபச் செய்திகளையும் சங்கம் அனுப்பி வைத்தது.

### சங்க ஊழியர்களின் பங்களிப்பு

சங்க அலுவலகத்தில் திரு. த. கணேசன் அவர்களும், செல்வி. ம. ஹம்ஸகௌரி ஆகியோரும், நூலகர்களான திருமதி. அ. ஜெயஸ்ரீ, செல்வி. த. ஜெயமாலா ஆகியோரும், மிகச் சிறந்த பணியாற்றி வருகின்றனர். திரு. இ. சுந்தரலிங்கம் அவர்கள் 06.11.2000 அன்று தொடக்கம் சங்கத்தின் நிருவாகச் செயலாளராக நியமனம் பெற்றுள்ளார். அன்றிலிருந்து இவரின் சிறப்பான பணி தொடர்ந்து வருவது பாராட்டப்படத்தக்கதாகும்.

### பொதுநல சேவை

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நிருவாக ஒழுங்குகளில் தமது அளப்பரிய சேவைகளை எந்தவிதப் பிரதி நோக்கும் இல்லாது பொதுநல



சேவையில் அடிநின்று உழைக்கும் இருவரை சங்கம் நன்றியோடு நோக்குகின்றது. அவர்கள் திரு. மா. சடாட்சரன் அவர்களும் திரு. சி. சரவணபவன் அவர்களுமாகும்.

### பொதுசன ஊடகங்களின் பங்களிப்பு

அவ்வப்போது சங்கத்தில் நடைபெறும் நடவடிக்கைகள் பற்றிய செய்திகளை வெளியிடுவதில் பொதுஜன ஊடகங்களின் பங்களிப்பு நன்றியொடு குறிப்பிடத்தக்கனவாகும்.

வீரகேசரி, தினகரன், தினக்குரல், நவமணி ஆகிய பத்திரிகைகளும், வானொலி நிலையங்களான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சூரியன், சக்தி, சுவர்ண ஒலி என்பனவும் தொலைக்காட்சி நிறுவனங்களான ரூபவாஹினி, ஐ.ரீ.என், சக்தி தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் சங்கம் நன்றி பாராட்டக் கடமைப்பாடுடையதாகும்.

### நன்றியுரை

இவ்வருடம் கொழும்புத் தமிழ்ச் சங்கப் பணிகளில் மிக முக்கியம் பெறுவது சங்கரப்பிள்ளை மண்டபத்திற்கு மாற்றப்படவிருக்கும் சங்க நூல் நிலையத்திற்கான செயற் திட்டங்களே.

இப்பணிக்கு வேண்டிய தளபாடங்களைக் கொள்வனவு செய்ய எமக்கு ரூபா 586, 468/75 தந்துதவிய சங்க முன்னாட் தலைவர் திரு. பொ. சங்கரப்பிள்ளை அவர்களின் குடும்பத்தினருக்கு நாம் எமது நன்றிகளைச் சமர்ப்பிக்கும் கடமைப்பாடு உடையவர்களாகின்றோம்.

மேலும் எமது மற்றைய பணிகளுக்கும் அவ்வப்போது பொருளுதவிகளையும், பண உதவிகளையும் தந்துதவிய பெருந்தகைகளுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும். சிறப்பாய் நாவற்குழியூர் நடராசன் கவிதைப் போட்டிக்கு ரூபா 20,000/- தந்துதவிய அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சங்க வளர்ச்சி கருதிக் காலத்துக்குக் காலம் எமக்கு அறிவுரைகள் தந்த ஆன்றோர்களுக்கும் நிகழ்வுகளில் பங்கு கொண்டு சிறப்புச் செய்த அறிஞர்களுக்கும், பொது மக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் சேரட்டும். பண்டிதர் வகுப்புக்களை நடாத்தும் அறிஞர் பெருமக்கள் பெருமனதுடன் வகுப்புக்களைப் பிரதியுபகாரம் நோக்காது நடாத்துகின்றனர். அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

சங்க நூலகத்திற்கு இவ்வாண்டு முன்னிலும் அதிக நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. இவற்றை அளித்த பெருமக்களுக்கும், நாம் நன்றியுடையோம். மேலும் சங்கத்தின் முழுப்பணிகளிலும் பொதுவாய் ஒத்துழைப்பு நல்கும் எமது ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கும் சிறப்பாய் ஒவ்வொரு குழுக்களின் செயலாளர்களுக்கும், குழு உறுப்பினருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

தவிரவும் தமது நெருக்கடியான பணிகள், பொறுப்புக்களின் மத்தியிலும் சிறந்த தலைமைத்துவத்தால் எம்மை வழி நடாத்திச் சங்கப் பணிகளைச் சிறப்புறச் செய்ய எமக்கு ஆக்கமும், ஊக்கமும் தரும் எமது மரியாதைக்குரிய தலைவர் பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்களுக்கும், பொருளாளர் திரு. ச. பாலேஸ்வரன் அவர்களுக்கும் எமது நன்றிகளைச் சங்கத்தின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சங்கப் பணிகளில் மிகச் சிறப்பாகச் செயற்படும் ஊழியர்களுக்கும், நன் மனத்தோடு உதவிகள் செய்யும் நல்லோருக்கும் எமது நன்றிகள் சேர்வதாக.

## நிறைவுரை

உலக மொழிகளில் தொன்மை மிகு மொழிகளில், எமது தாய்த்தமிழ் மொழியும் ஒன்றாகும். உன்னதமான பேரிலக்கியங்களால் முதன்மை பெறும் தமிழ்மொழி, கொழும்பு மாநகரில் பொன்விழாக் கண்டு பெருமையுறும் எமது கொழும்புத் தமிழ்ச் சங்கத்தால் மிகச் சிறப்பாக வளர்க்கப்பட்டு வருகின்றது.

தாயனைய மொழியைக் காப்பதும் வளர்ப்பதும் தமிழராகிய எமது தலையாய கடமையென்றுணர்வோம். மரபு பேணி, புதுமையையும் ஏற்று புதுப் புது இலக்கியங்களால் மொழி செழிப்புற உழைப்போம். அதற்கு உதவிக்கரம் நீட்டி உதவுவோம். இதுவே புத்தாயிரமாம் ஆண்டில் நமது திட சங்கற்ப-மாகட்டும்.

உலகெலாம் தமிழ் மொழியோங்க இறைவனை வேண்டி மீண்டும் எமது நன்றிகளையும் சமர்ப்பித்து மகிழ்கின்றோம்.

**- ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**
பொதுச் செயலாளர்

நன்றி.



## கொழும்புத் தமிழ்ச் சங்கம் சபை வரைவுள்ளது
## 31.12.1999 இல் உள்ளபடியான ஐந்தொகை

| | குறிப்பு | 31.12.1999 (ரூபா - சதம்) | 31.12.1998 (ரூபா) |
|---|---|---|---|
| நிலையான சொத்து | | | |
| கட்புலனாகும் சொத்துக்கள் | 07 | 5365,421.00 | 3,563,350 |
| முதலீடுகள் - நிரந்தர வைப்பு | 08 | 623,422.04 | 569,218 |
| | | 5,988,843.04 | 4,132,568 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 09 | 893,922.06 | 1,236,767 |
| கழி- நடைமுறைப் பொறுப்புகள் | 10 | 133,357.70 | 48,174 |
| தேறிய நடைமுறைச் சொத்து | | 760,564.36 | 1,188,593 |
| தேறிய சொத்து | | 6,749,407.40 | 5,321,161 |
| நிதியிடல் :- | | | |
| திரண்ட நிதி | 11 | 3,911,853.62 | 3,753,609 |
| கட்டட நிதி | 12 | 2,474,201.00 | 1,204,201 |
| பரிசில் நிதி | 13 | 172,704.28 | 172,704 |
| அச்சக நிதி | 14 | 170,647.50 | 170,647 |
| ஞாபகார்த்த நிதி | 15 | 20,000.00 | 20,000 |
| தேறிய மூலதனம் | | 6,749,407.40 | 5,321,161 |

ஒப்பம்: சரியானதென உறுதிப்படுத்தப்பட்டது.

| சோ. சந்திரசேகரம் | ச. பாலேஸ்வரன் | ஜின்னாஹ் ஷரிபுத்தீன் |
|---|---|---|
| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |

மேற்காட்டிய 1999 டிசம்பர் 31ம் திகதியிலான ஐந்தொகைக் கணக்கு சரியானதெனவும், இதனோடு இணைந்துள்ள 1999 டிசம்பர் 31இல் முடிவுள்ள ஆண்டு வரவு செலவுக் கணக்குகள் கொடுத்த பேரேடு, காசேடு, தகவல்கள் ஆகியவற்றின் படி தயாரிக்கப்பெற்றன எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

கொழும்பு
11. நவம்பர் 2000

ஜீ. இராசதுரை அன்கோ
பட்டயக் கணக்காளர்

## 31.12.1999 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு

| | குறிப்பு | 31.12.1999 (ரூபா - சதம்) | 31.12.1998 (ரூபா) |
|---|---|---|---|
| அங்கத்தவர் சந்தா | | | |
| ஆயுள் உறுப்பினர் | | 12,000.00 | 18,000 |
| சாதாரண உறுப்பினர் | | 12,300.00 | 7,850 |
| நன்கொடை | 16 | 789,510.00 | 749,484 |
| நிலையான வைப்பு வட்டி | 17 | 117,797.18 | 97,165 |
| வேறு வருமானம் | 18 | 201,720.90 | 7,422 |
| | | 1,133,328.08 | 879,921 |
| கழி- செலவுகள் | | | |
| நிலைய நிர்வாகச் செலவு | 19 | 980,693.16 | 836,262 |
| நிதியும் ஏனைய செலவுகளும் | 20 | 6,856.27 | 5,909 |
| | | 987,549.43 | 842,171 |
| வரிக்கு முன் செலவிலும் கூடிய வருமானம் | | 145,778.65 | 37,750 |
| கழி - வரி | | இல்லை. | இல்லை. |
| வரிக்குப் பின் செலவிலும் கூடிய வருமானம் | | 145,778.65 | 37,750 |
| கூட்டு - மேலதிக சாதாரண விடயம் | | — | — |
| செலவிலும் கூடிய வருமானம் (திரண்ட நிதிக்கு மாற்றப்பட்டது) | | 145,778.65 | 37,750 |



## 31-12-99 இல் முடிவடைந்த நிதியாண்டின் கணக்குகளின் குறிப்புக்கள்

### 1. கணக்கீட்டு எடுகோள்களும் கொள்கைகளும்

#### 1.1. அடிப்படைக் கணக்கீட்டு எடுகோள்கள்

சங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டு செல்லப்படும் என்றும் அதன் நடவடிக்கைகளைக் குறைப்பதற்கோ அல்லது சங்கத்தை மூடுவதற்கோ எண்ணம் எதுவும் இல்லை என்ற அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 1.2. பொதுக் கணக்கீட்டு கொள்கைகள்

##### 1.2.1. கணக்கீட்டு அடிப்படை

இலங்கை பட்டயக்கணக்கறிஞர் சங்கத்தின் கணக்கீட்டு நியமங்களுக்கும், பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கும் அமைவாக வரலாற்று கிரய அடிப்படையில் சொத்துக்கள் பெறுகின்ற பொழுதும் பொறுப்புகள் ஏற்படும் பொழுதும் மூலதனம் பெறப்படும் பொழுதும் அவை ஏற்பட்ட திகதிகளில் உள்ள பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. பணவீக்கம் தொடர்பான காரணிகளால் கணக்குகளில் ஏற்படும் தாக்கங்களுக்கு எதுவித சீராக்கங்களும் செய்யப்படவில்லை.

### சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படையும்

##### 2.1.1. ஆதனங்கள், பொறியும் உபகரணங்களும், பெறுமானத் தேய்வும்

